தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை நுவரெலியா மாவட்ட செயலகத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் ˙சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ACA – 6 படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொத்தம் ரூபா. 2,478,089,671 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் சரியானதன்மை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்குரிய மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ விடுதி தவிர ஏனைய அனைத்து நிறுவனங்களின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக 2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ii)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தம் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம் 756(6) இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு தொடர்பான இறுதி அறிக்கை 2024 யூன் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க	அம்பகமுவ பிரதேச செயலகம் "கைதவிர்ப்பு" இன் கீழும் நோவுட் பிரதேச செயலகம் அப் பெறுமதியை "ஆரம்ப மீதிக்கு சேர்த்தல்" கீழும் காண்பிக்கப்பட்டதால் நிதியல்லாத சொத்துக்களில் குறைவொன்று இடம் பெற்றுள்ளதாக.	பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு உரிய காலப் பகுதியில் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

வேண்டிய போதிலும் வலப்பனே, நுவரெலியா, அம்பகமுவ நோர்வுட் மற்றும் தலவாக்கலை பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ விடுதி உட்பட அரசின் 64 பொது சேவை வீடுகளின் பொருள் மெய்மையாய்வு தொடர்பில் இறுதி அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.		

(ஆ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நுவரெலியா மாவட்டத்தின் சுற்றுலா விடுதி பொறுப்பாளர' மற்றும் உதவியாளர் உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்காக 2012 மார்ச் 21 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் ஒப்பந்தகாரருடன் மேற்கொண்ட உடன்படிக்கையில் முற்பண பிணை நிபந்தனைகள் நியதிகளின் பிரகாரம் குறித்த நிர்மாணத்தை நிறைவேற்றுவதற்கு தவறியதால் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 900,878 ஆன மீதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்படாததன் பேரில் 12 ஆண்டு காலமாக இருந்து வரும் கட்டுநிதி மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக சட்டமா அதிபருடன் திணைக்களத்தினால் வ/ப கூட்டுறவு காப்புறுதி கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதியொன்று எமக்கு அனுப்பி வழங்கப்பட்டுள்ளதுடன் அப் பிரதி கணக்காய்வினை மேற்கொள்ளும் போது உங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இங்கு எதிர்வரும் நடவடிக்கைகளை செயற்படுத்துவது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட விடயமொன்றாக இருப்பதுடன் அது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பணம் கிடைத்த பின்னரே தீர்வு செய்யலாம் என்பதாக.	உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி மற்றும் பின் தொடர் நடவடிக்கை எடுத்து தீர்வு செய்யப்படாத முற்பண மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த மீளாய்வாண்டின் 1.6.1. (ஆ) பந்தியின் அவதானிப்புக்குரிய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் நிதிப்பிரமாணம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதில் 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா. 362,201 ஆன கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.	1002 மற்றும் 1101 இன் கீழ் வரை வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு ஆண்டின் இறுதியில் போதுமாக இருக்கவில்லை. ஆதலால் 1101 செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் பிரயாண செலவினம் மற்றும் 1002 இன் காட்டப்பட்டுள்ள மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கான தேவைப் பாட்டிற்காக போதியளவு நிதி ஏற்பாடு இல்லாமை காரணமாக தேறிய நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்பினை ஏற்படுத்துவதற்கு நேர்ந்ததாக.	நிதி ஏற்பாடு எல்லையை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப் படுவதற்குரிய மேற்பார்வை செய்யாத பொறுப்பான தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு வேலைத ் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

3.2 ஏனைய அமைச்சுக்கள் திணைக்கங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முதியோர் செயலகத்தினால் வெவ்வேறு செயற்திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 05 சந்தர்ப்பங்களில் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா. 14,022,227 பணத்தை குறித்த பணியை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	தேசிய கைப்பணி சபைக்கு கட்டளை வழங்கப்பட்டு பொருட்கள் கிடைக்காமை, பொருட்களை கொள்வனவு செய்தற்கு பெறுகை செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை. நிர்மாண நடடிக்கை பூர்த்தி செய்யப்படும் வகையின் பிரகாரம் தவணையாக கொடுப்பனவு நடவடிக்கைகள், கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்த பொருட்களின் தொழிநுட்ப விவரக்குறிப்பு வழங்குவதற்கு தாமதமானமை அடிப்படையில் நிதி ஏற்பாடு தடுத்து வைக்கப்பட்டதாக.	நிதி ஏற்பாடு உரிய நோக்கங்களுக்கு கால ரீதியில் முழுமையாக பயன்படுத்தாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்.

3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (2)	ஏதேனும் திட்டவட்டமான செயற்பாடொன்றிற்காக வழங்கப்பட்ட கட்டுநிதி அச் செயற்பாடு முடிவடைந்த உடனே தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் இரண்டு பிரதேச செயலங்களின் உத்தியோகத்தர்களால் 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 280,025 ஆன கட்டுநிதி மிகைகளை தீர்வு செய்வதற்கு 25 நாட்கள் முதல் 46 நாட்கள் தாமதிக்கப் பட்டிருந்தன.	எதிர்காலத்தில் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	முறையான பரிசோதனை யொன்று மேற் கொண்டு தீர்வு செய்தல் தாமதத்தினால் நிதி முறைகேடு ஒன்று இடம் பெற்றிருந்தால் குறித்த தரப்பினருக்கு நடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் இணக்கப்பாட்டை பேணும் வகையில் வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 570 (2)	காலாவதியான வைப்புக்களை அரச வைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நுவரெலியா பிரதேச செயலகத்தினால் ரூபா. 60,000 ஆன நிர்வாக செலவினத்திற்கான வைப்பொன்று 2006 ஆம் ஆண்டிலிருந்து பொது வைப்புக் கணக்கில் நிறுத்த வைக்கப்பட்டிருந்தது	நிர்வாக செலவினங்களில் ஒரு பகுதி தற்போது செலவிடப் பட்டுள்ளது. பரிசோதனை முடிவடைந்தவுடன் எஞ்சிய நிர்வாக செலவினத்தை திர்வு செய்வதாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடடிக்கை எடுத்து விரைவில் தீர்வு செய்தல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகர்க ளுக்கான வருடாந்த இடமாற்றல் கொள்கையின் 2.2.2 மற்றும் 2.23 ஆம் பந்திகள்.	இ ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றாலும், இரண்டு பிரதேச செயலகங்களில் 100 உத்தியோகத்தரகள் 06 முதல் 26 ஆண்டுகள் வரை ஒரே இடத்தில் பணியாற்றி வந்தனர்.	05 ஆண்டுகளுக்கு மேல் சேவை முடித்த உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கின்ற போதும் வருடாந்த இடமாற்றங்கள் பெறப்படாததால் அதே பதவியில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக	டமாற்றக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 1941 ஆம் ஆண்டு அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அரசு விளையாட்டுக் கழகக் கட்டிடம், ரூபா 21,800,000 பெறுமதியுடன் மாவட்ட செயலகத்தின் நிலையான சொததொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கையில் 80 உறுப்பினர்களைக் கொண்ட விளையாட்டுக் கழகத்தின் 10 உறுப்பினர்கள் மாத்திரம் கூடி 2024 ஜூன் 12 ஆம் திகதி மாதாந்தக் சபையாக நடத்தப்பட்டு இந்தக் கட்டிடத்தை ஒரு வெளிப்புறக் தரப்பினருக்கு 20 ஆண்டுகளுக்கு ஒரு இரவு விடுதியை நடத்துவதற்கு குத்தகைக்கு வழங்கியிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக கையொப்பமிட்ட உத்தியோகத்தர் அன்றைய திகதி வேறு உத்தியோகபூர்வ கடமைகளில் ஈடுபட்டிருந்ததால், கையொப்ப ஆவணமும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் இருக்கவில்லை. இதற்காக, ஒரு வணிகத்தை அசையும் சொத்தாக குத்தகைக்கு எடுப்பதற்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு, கட்டிடத்தின் குத்தகைக்கு விடுவதற்கான நிபந்தனைகள் அதில் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த இடத்தில் உள்ள விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான மதுபான அனுமதிப்பத்திரம் மாவட்டச் செயலாளரின் தனிப்பட்ட செலவில் ரூபா 1,128,500 இற்கு புதுப்பிக்கப்பட்டு, இந்த இடத்தில் மதுபானங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வெளித் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முன்பு, இக்கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற விளையாட்டு சங்கம் மற்றும் அதன் உபகரணங்களை நிறுவுவதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவினத் திட்டம் மற்றும் தோட்ட உடகட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா 3,200,000 மற்றும் ரூபா 2,000,000 என முறையே ரூபா 5,200,000 நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டிடமொன்று விளையாட்டு கழக மண்டபத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024	குறித்த விடயம் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக சுயாதீன குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் மூலம் அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்கு மும்மொழியப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் குறித்த பதிலை உங்களுக்கு அனுப்புவதற்கு நடிக்கை எடுப்பதாக.	முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு அரச ஆதனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியிருந்தால் உரிய தரப்பினருக்கு முறைப்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவினத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 03 கிராமப்புற வீதி அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,200,000 ஆன ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டு, இந்தக் கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஹங்குரன்கெத பிரதேச செயலகப் பிரிவின் மண்சரிவு அதி ஆபத்து காரணமாக மீள குடியேற்ற நிகழ்ச்சித்திட்டதிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட 12 நலனாலிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா. 300,000 பணம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வைப்புச் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் மேல் கடந்திருந்த போதும் உரிய நலனாளிகளுக்கு கொடுப்பனவிற்காக அல்லது நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாக.	முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்கு நிதி ஏற்பாடுகளை ஈடுபடுத்தப்படாமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	தனியார் கம்பனியொன்றினால் ஹங்குரன்கெத பிரதேச செயலகப்பிரிவின் சமய நிறுவனங்கான சூரிய சக்தி வசதிகளை வழங்குதற்காக 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்திருக்கும் 1,297,770 தொகை மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா. 994,445 ஆன பணம் வைப்புச் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நடத்திருந்த போதும் பணத்தை பயன்படுத்தி சமய நிறுனங்களுக்கான சூரிய சக்தி வசதிகளை வழங்குவதற்கு அல்லது நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருத்தமான வகையில் அரச வருமானத்தில் செலவு வைக்க நடடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாக.	நிதி ஏற்பாடுகளை உரிய நோக்கங் களுக்காக முழுமையாக பயன்படுத்தாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தினால் வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக காணி கையேற்றல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக 2020 – 2021 காலப்பகுதியில் 06 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா. 2,092,852 தொகை வைப்புச் செய்யப்பட்டு 03 ஆண்டுகள் முதல் 22 ஆண்டு வரையான காலப்பகுதி கடந்திருந்த போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக.	காணியின் உரித்து யாருக்குச் சொந்தமானது என்பதைத் தீர்மானிக்க முடியாததால், காணி கையேற்றல் சட்டத்தின் பிரிவு 10(1) இன் கீழ் மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்த விவகாரம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.	முறைப்படி நடவடிக்கை எடுத்து தீர்க்க விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவின் சௌபாக்ய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வெலிஓயாவின் மேல் பகுதியிலிருந்து சனசமூக மண்டபத்திற்குச் செல்லும் வீதியின் அபிவிருத்திக்காக கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு எழுதப்பட்ட ரூபா 731,250 காசோலை, அது வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்து விட்டதன் காரணமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	வெலிஓயாவின் மேல் பகுதியிலிருந்து சன சமூக மண்டபம் வரையிலான வீதியின் அபிவருத்திக்காக எழுதப்பட்ட ரூபா 731,250.00 தொகை 2025.03.17 ஆந் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய திட்டங்களைச் செயற் படுத்தப்படாமை குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	கொத்மலை பிரதேச செயலகப் பிரிவின் அனர்த்த உயர் ஆபத்து பகுதிகளில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான வெதல்ல வீட்டுவசதித் திட்டத்தின் தவணைக் கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,125,000 தொகை 2023 முதல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை, தொடர்புடைய நிதி பயனாளிகளுக்கு செலுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த நிறுத்தி வைத்தல் பணத்தை பயனாளிக்கு வழங்க நிர்மாணத்தின் தரம் உள்ளிட்ட பல காரணிகளைக் கருத்தில் கொள்ளுமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், செயற்பாடு முழுமையாக முடிந்த பின்னரே நிறுத்தி வைத்தல் பணத்தை ஒரே நேரத்தில் செலுத்த வேண்டியதால் ஒதுக்கீடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பின்னர் விடுவிக்கப்படும் என்பதாகவும்.	முறையான திட்டத்தைப் பயன்படுத்தி தொடர்புடைய பணிகளை தரத்துடன் முடித்து நிறுத்தி வைத்தல் பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	வலப்பனை பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டில் கருப்பு வெற்றிலை வாங்குவதற்காகப் பெறப்பட்ட ரூபா 1,999,200 ஐ பொது வைப்பு கணக்கில் வைப்புச் செய்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுத்து குறித்த நலனாலிகளுக்கு தீர்வு செய்வதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 571 இன்	இப்போது அரச வருமானத்திறகு செலவு வைக்கப்பட்டுள்ளதாக	முறையான பரிசோதனை யொன்று நடத்தப்பட்டு நிதியை சரியான நோக்கத்திற்கு அனுப்பி வைக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பிரகாரம் நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட அரச வருமானத்திற்கு செலவு வைக்கவோ உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(எ)	03 பிரதேச செயலகங்களால் 2020 - 2022 காலப்பகுதியில் செய்யப்பட்ட நிர்மாணங் களிலிருந்து கழிக்கப்பட்ட தொகையாக பொது வைப்பு கணக்கில் மொத்தம் ரூபா 2,409,901 தொகையான 09 வைப்புத் தொகைகள் வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	இரண்டு பேரின் பணத்தைத் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பணத்தைத் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	தொடர்புடைய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும்.
(ஏ)	05 பிரதேச செயலகங்களில் காணிகளை கையேற்கப்பட்ட 69 பயனாளிகளின் காணி கையேற்கும் நடவடிக்கைககள் தீர்வு செய்யப்படாமல் இழப்பீடு வழங்கப்படாமல் இருந்த போதிலும், 2014-2019 காலப்பகுதியில் கிடைத்த ரூபா 890,527,783 ஆன காணி கையேற்றல் இழப்பீடு வைப்புச் செய்யப்பட்ட செய்யப்பட்ட திலிருந்து 5 முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலம் மற்றும் 03 பிரதேச செயலகங்களின் 103 பயனாளிகளுக்காக காணி இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக கிடைத்த ரூபா 20,093,763 தொகை வைப்புச் செய்யப்பட்டு கையேற்றல் நடவடிக்கைகள் 10 முதல் 18 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்துவிட்ட போதிலும் காணி கையேற்றல் நடவடிக்கைகளை .தீர்வு செய்து இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணி கையேற்பு செயற்பாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றதுடன், செயற்பாட்டின் முறையின் இறுதியில் இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கைப்படும் என்பதாக	காணி கையேற்கும் செயற்பாட்டை விரைவுபடுத்தி இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 4,541,080 பெறுமதியான 6 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வழக்குகளுக்கான காசோலைகள் அரச சட்டத்தரணியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய வழக்குகள் வாபஸ் பெறப்பட்ட பிறகும் தொடர்புடைய காசோலைகள் இன்னும்	தொடர்புடைய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும்.

	அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்பதாக.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டத்தை நிறைவேற்றாமல் கைவிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	தசாப்த விசேட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கந்துகர தசாப்தம் 2024 – 2033 செயற்திட்டத்திற்கான அம்பகமுவ பிரதேச செயலக பிரிவிற்கு ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அந்நிதி ஏற்பாட்டில் இருந்து செயல் படுத்துவதற்கு 2024 மார்ச் 21 ஆம் தேதி அங்கீகரிக்கப்பட்ட 9 செயற்திட்டங்கள் காணியில் உள்ள சிக்கல்கள் சமூக சங்கங்கள் முன்வராமை , NBRO அறிக்கை இல்லாமை, போதிய அளவு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாமை மற்றும் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தாமை போன்ற காரணங்களின் பேரில் செயற்திட்டங்கள் கைவிட ப்பட்டமையால் மொத்த ரூபா 13.7 மில்லியன் நிதி ஏற்பாடு மீள கையளிக்கப்பட்டிருந்தது.	09 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றை செயற்படுத்த முடியாமை தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் உட்பட அலுவலகத்தில் காணப்பட்ட திட்டங்களின் அளவினை நிறைவேற்றும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் இருந்ததன் காரணமாக சிரமம் ஏற்பட்ட தாக	நிதி ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பான முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
.(ஆ)	ஜனாதிபதி செயலகத்தின் விசேட திட்ட ஏற்பாடுகளின் கீழ், தோட்டப் பகுதியில் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 13 நிர்மானங்கள் மற்றும் 06 கொள்வனவுகளுக்காக ரூபா 21,000,000 அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு 2024 ஜூலை 24 ஆந் திகதி நிதி வழங்கப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 10 ஆம் திகதி வரையில் வேலைகளை முடிக்காமல் பணம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதனால் தோட்டப் பகுதியில் மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக தோட்டப் பகுதியில் உடகட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கங்களை அடையத் தவறியிருந்தது.	தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, திட்ட ஒருங்கிணைப்பாளரிடமிருந்து திட்ட திருத்தங்களுக்கான அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் 02 தேர்தல்கள் நடாத்தப்பட்டமையால் .இந்தக் காலகட்டத்தில் திட்டங்களை இடைநிறுத்த நேர்ந்தமை முக்கிய காரணங்களாக இருந்ததாக	- மேற்படி
.(இ)	நுவரெலிய பிரதேச செயலகத்தினால் பீதுருவத்த ஸ்ரீ முத்துமாரி அம்மான் கோவில் அருகே பக்கச் சுவர் நிர்மானிக்கும் செயற்திட்டம் ரூபா 1,455,000 ஆனா பெறுமதியொன்றுடன் 2024 செப்டம்பர் 01 ஆம் திகதி பூர்த்தி	சங்கத்தினால் அவர்களுக்கு நட்டம் என்பதாக கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதால் .அவர்களிடம் இருந்து தாமத கட்டணத்தை அறவிட முடியாதிருந்ததாக	குறிக்கப்பட்ட காலப்பகுதியில் எதிர்பார்த்த பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத

	செய்வதற்காக சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது எனினும் 2024 திசெம்பர் 12 ஆம் திகதி வரை உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த செயற்பாடுகளின் 40 சதவீதம் அளவிலான வேலைகள் நிறைவேற்றப் படாமல் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக பிரதேச செயலகத்தினால் ரூபா 737,382 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.		உத்தியோகத்தர்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு கைவிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நுவரெலியா பிரதேச செயலகத்தினால் வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கி 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 3,492,000 ஆன உடன்படிக்கை பெறுமதியுடனான இரண்டு செயற்திட்டங்கள் இச்செயற் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை மிகைத்து 02 மாதங்கள் கடந்திருந்த போதும் அச் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணத்திற் கான உடன்படிக்கை செயற்திட்டத் திற்கான வளவில் 2024 திசெம்பர் 12 ஆம் திகதிய பௌதீக பரிசோதனையின் போது நிர்மாண பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற எதுவும் நிர்மாண வளவில் காணப்படவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையை மீறியிருந்த சமூக அடிப்படையிலான அமைப்புக் களுக்குரிய 2021 செப்தம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை வழங்குவதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் போலியான அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.	இரண்டு செயல் திட்டங்களின் வேலைகளை ஆரம்பிப் பதற்காக முற்பணத்தை விட விலை கூறக்கூடிய கற்கள் மணல் சிமெந்து வேலைத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்ததால் பணம் செலுத்தப்பட்டதுடன் அப்போது காணப்பட்ட மழையுடனான நிலையை மற்றும் அவர்களின் சுற்றாடல் சிக்கல் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கை இடம் பெறவில்லை. முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நிதி ஏற்பாடு மீண்டும் அரசுக்கு கையளிக்கப்பட்டது. இந்த சங்கத்தை கறுப்பு பட்டியலில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	முறையான பரிசோதனையொன்றை நடத்தி முறைகேடுகள் செய்த உத்தியோகத்தர்கள் மீதும், திட்டத்தை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 செயத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஹங்குரங்கெத பிரதேச செயலக பிரிவின் மந்தாரம் நுவ குட்வுட் திறந்தவெளி பார்வையிட நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் இறுதி பட்டியலின் 18 ஆம் உருப்படியின் கீழ் கைவேலி நிர்மாணம் (Hand Rail) இதற்காக 73 சதுர மீட்டருக்காக ரூபா 12,000 (SSR) வீதம் மொத்தமாக ரூபா 876,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனினும் கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி 31 ஆம் திகதி வரை குறித்த உருப்படிக்கான வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 2025 சனவரி மாதம் இறுதி திகதி வரை தொடர்ச்சியாக காணப்பட்ட மழை காரணமாக திட்டத்தின் இறுதி செயற்பாடான கைவேலி தயாரித்தலுக்கு ஏதேனும் காலம் ஒன்று தாமதமானதுடன் பின்னர் திட்டத்தின் அனைத்து செயல்பாடுகளும் வெற்றிகரமாக பூர்த்தி செய்து குறித்த காசோலை 2025.02.11 ஆந் திகதி குறித்த தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.	பணி நிறைவடை வதற்கு முன்னர் கொடுப்பனவிற்காக பரிந்துரைத்த, அனுமதித்த, சான்றுறுதிப்படுத்திய காசோலை எழுதி கையில் வைத்திருந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் அடைந்திடாத செயற் திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நுவரெலிய பிரதேச செயலகத்தினால் கந்துகர தசாப்தம் 2024 - 2033 தசாப்த விசேட ஒன்றிணைந்த நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2024 திசெம்பர் 12 ஆம் திகதி வரை உடன்படிக்கை செய்து 04 மாதங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் காணப்பட்ட ரூபா 3,201,000 ஆன 03 செயற் திட்டங்களின் வேலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. திட்டத்தை தெரிவு செய்யும் போதும் அங்கீகரிக்கும் போதும் பிரதேசத்தில் கூடிய தேவையாக இருந்த திட்டத்தை தெரிவு செய்யாமை உரிய திட்டத்தினை குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் முன்னுரிமையாக உள்ள வேறு திட்டத்திற்காக உரிய பணத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக அரசின் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதன் நோக்கங்கள் நிறைவேற்றுப்பட்டிருக்க வில்லை.	பிரதேசத்தின் அரசியல் அதிகாரத்தினால் நேரடியாக இத்திட்டத்திற்கு முன்மொழிவு கள் வழங்கப்பட்டதுடன் பிரிவுகளில் காணப்பட்ட சங்கங்கள் மூலம் தொடர்ந்தும் செயற் திட்டங்களை செயற்படுத்து வதாக குறிப்பிடப்பட்ட போதும் திட்டம் திசெம்பர் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் ஆதலால் இந்த திட்டங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை மீண்டும் அரசுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும்.	திட்டமொன்றும் முறையான கண்காணிப்பொன்றும் ஊடாக விரைவில் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 உள்நாட்டு நிதியங்கள் மூலம் செயல்படுத்திய செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முறையான கிராம அபிவிருத்தி ஒன்றை உருவாக்குவதன் மூலம் வெற்றிகரமான பொருளாதாரம் இலக்கினை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்பை ஜனாதிபதி செயலகத்தினால் 03 கிராமிய திட்டங்கள் ரூபா 3,200,000 நிதி ஏற்பாடு பன்முகப்படுத்தப்பட்டு வரவு செலவுத் திட்டம் - 2024 தலைப்பிலான 2023 திசெம்பர் 29 ஆம் திகதி நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் MF/02/2023 அறிக்கையின் வழிகாட்டலுக்கு புறம்பாக திட்டம் இரத்து செய்யப்பட்டு அரச ஊழியர்களின் உடற்பயிற்சி நிலையம் ஒன்றின் நிர்மாணத்திற்காக பணம் விடுவிக்கப்பட்டு செலவிடப்பட்டிருந்தது.	இந்த 03 திட்டங்களும் 2024.06.12 ஆம் திகதி வரையில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை அத்தோடு நுவரெலிய பிரதேச ஒருங்கிணைப்பு குழு கௌரவ தலைவரால் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் செயல்படுத்த முடியாமல் காணப்பட்டால் அத்திட்டங்களை இரத்து செய்து அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,500,000 ஐ அரச உத்தியோகத்தர் களின் உடற்பயிற்சி நிலையத்திற்காக ஈடுபடுத்து மாறு ஆலோசனை வழங்கப் பட்டதாக	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு புறம்பான நிதி ஏற்பாட்டை பயன் படுத்திய உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	சனாதிபதி செயலகத்தின் நிதி ஏற்பாட்டின் பேரில் ஹங்குரன்கெத பிரதேச செயலகப் பிரிவின் எலமுள்ள கமநல சேவைகள் நிலைய வளவில் கிராம சக்தி மக்கள் திட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 6,900,000 ஆன மொத்த கிரயமொன்றுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த விதை போஞ்சியை களஞ்சியப்படுத்தும் கட்டிடம் மற்றும் குளிர் அறை 2025 ஜனவரி 31 ஆம் திகதியான கணக்காய்வு திகதி வரையிலும் விளைவற்று இருந்தன	இந்தக் குளிர் அறை நிர்மாணத்தின் அடிப்படை நோக்கம் போஞ்சி விதைகளுக்காக விலை உறுதிப்படுத்தலை ஏற்படுத்துவதுடன் தற்போது போஞ்சி விதையில் விலை உயர் நிலைமையில் காணப்பட்டதால் அவ்வாறு களஞ்சியப்படுத்தல் இவ்வாண்டின் தேவையற்றது என்பதாக விவசாய திணைக்களத்தின் மத்திய விதை ஆய்வுக்கூடம் பேராதனை மூலம் கோரப்பட்ட் வேண்டுகோள் தொடர்பான தேவையான எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	முறையான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்காக வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

.(ஆ)	2021 சௌபாக்கிய உற்பத்தி கிராம திட்டத்தின் கீழ் ரூபா 8,456,250 ஆன நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தினால் கோப்பி விதை திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட்டிருந்தது கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி 31 ஆம் திகதி அளவில் திட்டம் செயற்படுத்தப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பொது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் கீழ் ரூபா 3,234,843 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஹனுகெட்டுவ கோப்பி விதை சேமிப்பு நிலையம் மற்றும் இடம்பிட்டிய மற்றும் மெட்டிபெம்பிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள ரூபா 523,000 செலவில் புதுப்பிக்கப்பட்ட இரண்டு கோப்பி விதை சேகரிப்பு நிலையங்கள் செயல்படாமல் இருந்தன. மேலும், இடம்பிட்டிய மற்றும் மெட்டிபெம்பிய கோப்பி விதை சேகரிப்பு நிலையங்களுக்கு மின்சார இணைப்பு இல்லாததால் ரூபா 1,860,000 செலவில் வாங்கப்பட்ட 07 கோப்பி தோல் அகற்றும் இயந்திரங்களும் 03 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படாமல் இருப்பது மேலும் கவனிக்கப்பட்டது.”	இந்த நிலையங்களுக்கு ஏழு கோபி தோல் அகற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன, ஆனால் கோபிப்பி தோலை சேகரிக்கும் நிலையங்களுக்கு மின்சாரம் இல்லாததால் இந்த இயந்திரங்கள் தற்போது இயங்கவில்லை.	முறையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு இந்தத் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த முடிவுகளை அடைய நடவடிக்கை எடுக்காத பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மேலும் திட்டத்தை பயனுள்ளதாக்க ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். வேண்டும்,
.(இ)	அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ஒரு டிராக்டர் மற்றும் அதன் டிரெய்லர் மற்றும் 2017 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வழங்கப்பட்ட நீர் பவுசர் ஆகியவை 2020 ஒக்டோபர் மாதத்திற்குப் பிறகு பயன்படுத்தப்படாமல் விளைற்றுக் இருந்தன.	இந்த டிராக்டர் பவுசரை கந்தபொல விதை உருளைக் கிழங்கு பண்ணைக்கு வழங்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.	இதனை ஆக்கபூர்வமாக உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது முறையான முறையில் வேறு நிறுவனத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள அரச காணிகளில் அரசிற்குரிய உரித்தினை பாதுகாப்பதற்காக கிராம செயலாளர் தமது பிரிவு மட்டத்தில் அத்துமீறிய கைப்பற்றல்கள் இடம்பெற்று உள்ளதா என்பது தொடர்பாக நிரந்தரமாக	கடந்த ஆண்டுக்குரிய இரண்டு வார அறிக்கையில் சரியாகப் பெற்றுக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அடுத்த ஆண்டுகளில் முறையாக அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு	நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் அத்துமீறிய கைபற்றல்கள் தொடர்பாக இரண்டு வார அறிக்கை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு

	பரீட்சித்து பார்த்து ஒவ்வொரு இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை அவ்வாறான பிடித்தல்கள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிக்கை இட வேண்டிய போதிலும் ஹங்குரன்கெத மற்றும் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவுகளில் 37 கிராம சேவையாளர் பிரிவுகளின் கிராம சேவையாளர்களால் குறித்துரைத்த பிரகாரம் இரண்டு வார அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்குமாறு கிராம சேவையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக	நடவடிக்கை எடுப்பதல் இரண்டு வார அறிக்கை முறைப்படி வழங்குவதாக உறுதிப்படுத்தும் வேலை திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
.(ஆ)	02 பிரதேச அலுவலகங்களில் 06 ஓய்வூதியம் பேருக்கு ரூபா 1,624,561 ஆன வாழ்க்கைச் செலவின படிகள் மற்றும் பணிக்கொடைகள் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இதில் ரூபா 537,618 அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஜுன் 10 ஆம் திகதிய ஓய்வூதிய 3/2022 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசணைகள் வழங்கப்பட்டிருந்த போதும் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க பிரதேச செயலாளர்களால் செயற்பட வேண்டியதுடன் அதற்காக அரச நிதிப் பிரமாணம் 101 முதல் 113 வரையான ஏற்பாடுகள் மற்றும் தாபன விதிக் கோவையில் 2 ஆம் தொகுதியின் ஏற்பாடுகளை பிரதேச செயலாளர்களால் பின்பற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	இந்த மீதியை அறவிடுவதற்குரிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் தீர்மானத்தின் பேரில் எதிர்வரும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுவதாகவும் அநேகமான மீதிகள் தற்போது அறவிடப்பட்டு காணப்படுவதாக.	முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு கூடுதலான கொடுப்பன விற்காக உத்தியோ கத்தர்களின் ஈடுபாடு உள்ளதா என்பது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கும் குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூடுதலான கொடுப்பளவு செய்த ஓய்வூதியத்தை அறவிடுவதற்கும் கூடுதலாக ஓய்வூதியக் கொடுப்பனவை தவிர்ப்பதற்குமாக பலமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும்
.(இ)	மத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்திற்குரிய மீளாய்வாண்டில் நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள குடும்பங்களை பலப்படுத்துவதற்கும் பெற்றோர் ஒருவர் மட்டும் உள்ள குடும்பங்களை பலப்படுத்துவது மற்றும் வலது குறைந்த நபர்களுக்காக உதவி வழங்குவதற்காக கிடைத்த ரூபா 462,500 தொகையை குறித்து நோக்கங்களுக்காக செலவிடப்படாமல் 2025 ஜனவரி 31 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரை வைப்பு	மானியங்களுக்காக தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வும் வலது குறைந்தவர் களுக்காக மானியங்களை வழங்குவதற்காக மூன்றாவது தவணைகளாக ரூபா 150000 தொகை மாத்திரம் எஞ்சி இருந்ததாகவும் வழங்கப்பட்ட இரண்டாம் தவணையின் முன்னேற்றத்தை பரீட்சித்து அப்பணத்தை வழங்குவதற்கு	உரிய நிதியுங்களை ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	
(ஈ)	நிதிப் பிரமாணம் 149 இன் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் முறையாக நிறைவேற்றாமை காரணமாக அவர் ஹங்குரன்கெத பிரதேச செயலகம் மற்றும் நோர்வுட் பிரதேச செயலகத்தினால் அரசின் காணிக்கு குத்தகைக்கு குத்தகை அறவிடும் போது அந்த ஏற்பாடுகளின் பிரகாசம் நடவடிக்கை எடுத்து நீண்டகால அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அரசின் காணி களுக்குரிய ரூபா 26,577,744 ஆன குத்தகைத் தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	ஏற்பாடுகளின் பிரகாரம் குத்தகை தொகையை அறவிடவாத உததியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்திறனாக நடவடிக்கை எடுத்து குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மாகாண சபையின் நிதி விதி கோவை இல. 116.3 பிரிவின் பிரகாரம் வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிக்காக வருடாந்த வாடகைப் பணத்தை தாமதமின்றி அறவிடப்பட வேண்டிய போதிலும் 04 பிரதேச செயலகங்களினால் வருடாந்த குத்தகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,817,371 தொகை 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த நிலுவை குத்தகை கொடுப்பனவிற்காக 09 பேர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் ஒருவர் நிலுவைத் தொகையை கொடுப்பனவு செய்துள்ளார். காசு கொடுப்பனவு செய்து பற்றுச்சீட்டு இணைக்கப் பட்டுள்ளது மேலும் இது தொடர்பாக எதிர்காலத்தில் கூடிய கவனம் செலுத்தி மேற்பார்வை ஒன்று செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உரிய காலத்தில் குத்தகை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நிதி விதி கோவையின் அறிவுறுத்தல்களின் பேரில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஊ)	2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க காணி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் , காணிகளை முறைப்படுத்துவதற்காக, அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பகுதியில் உள்ள 32 கிராம அலுவலர் பிரிவுகளில் 18 பிரிவுகளுக்கு மாத்திரமே 2022 ஆம் ஆண்டில் காணி கச்சேரிகள் நடத்தப்பட்ட போதிலும், இந்த 10 பிரிவுகளுக்குரிய சமூகமளித்த 537 பங்கேற்பாளர்களுக்கு (நீண்ட கால, வருடாந்த மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம்) அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	11 பிரிவுகளில் 537 பேருக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பரீட்சிக்கும் போது தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இருப்பினும், தொடர்புடைய காணிகள் அமைந்துள்ள இடங்கள் பரீட்சிக்கப்பட்டு அடுத்து வரும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளதாக.	விரைவான வேலைத் திட்டமொன்றைப் பயன் படுத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(எ)	நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் 05 பிரதேச செயலகங்களுக்குரிய 39 சமுர்த்தி வங்கிகளால் 1,755 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 125,545,708 கடன்கள் 2024 திசெம்பர் 31, வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நட்டக் கடன்களை வசூலிக்கவும், உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து அக்கரை செலுத்தவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	முறையான விசாரணையொன்றை நடத்தி உரிய நேரத்தில் கடன்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காத உத்தியோகத்தர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் நிலுவையில் உள்ள கடன்களை அறவிடுவதற்கு ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 செப்தெம்பர் 15 ஆந் திகதிய PC/GPA/Circular/ 29/2020 ஆம் இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின் மூலம் அரசு நிறுவனங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களைச் சந்தித்து தங்கள் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் வகையில் அனைத்து நிறுவனங் களிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பொது மக்கள் தினமாகிய ”திங்கட்கிழமை” தங்கள் அலுவலகங்களில் இருக்க வேண்டியதுடன் அத்தியாவசிய வேலைகள் தவிர வேறு காரணங்களுக்காக விடுமுறை எடுப்பதையும், அலுவலகத்திற்கு வெளியே வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் தவிர்க்க வேண்டும் எனக் கூறப்பட்ட போதும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 03 பிரதேச செயலகங்களில் பல்வேறு பதவிகளில் உள்ள 1432 உத்தியோகத்தர்ள் 13 திங்கட் கிழமைகளில் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.	உள்ளக கட்டளைகள் மூலம் அத்தியாவசிய காரணங்களுக்காகத் தவிர, ஊழியர்கள் விடுமுறை எடுக்கக் கூடாது என்றும், திங்கட்கிழமை எடுக்கப்படும் ஒவ்வொரு லீவினையும் எனது அங்கீகாரத்துடன் எடுக்க வேண்டுமென பதவியணியினர் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	.தொடர்புடைய ஏற்பாடுகளுடன் இணங்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மேலும் இது தொடர்பாக மேற்பார்வையை அதிகரிக்க நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, மற்றும் உள்ளவாறான பதவியணியனருடன் ஒப்பிடும் போது,மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச 07 பிரதேச செயலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1610 ஆக இருந்த போதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் அதில் 226 வெற்றிடங்கள் காணப்பட்டன.	இந்த அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புமாறு பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக	பதவியணியின் மீளாய்வு நடத்தப்பட்டு, தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.